**CC 13/2017 அ.சா.3 கிருஷ்ணகுமார் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திருப்பூரில் உள்ள சந்தோஷ் கார்மன்ஸ் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கின் சாட்சி ராஜேஷ் அரவிந்தை தெரியும். அ.சா.5 ராஜேஷ் அரவிந் என்பவர் கமலம் இன்டர்நேஷல் என்ற பெயரில் நிறுவனம் வைத்துள்ளார் அதில் மூன்று பேர் வேலை செய்து வருகிறார்கள் அந்த நிறுவனம் ஒரு சிறிய நிறுவனம் என்றால் சரிதான் அந்த நிறுவனத்திற்கு வருமான வரி மற்றும் ஜிஎஸ்டி வரி எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த மூன்று பேர் என்னென்ன வேலை செய்கிறார்கள் என்றால் தெரியாது. அ.சா.5 காலேஜ ரோடு ஆறு செட்டி தோட்டம் திரு.வி.க நகர் திருப்பூர் என்ற முகவரியில் வசித்து வருகிறார். எனக்கு திருமணம் ஆகவில்லை. அ.சா.1 கார்த்திகா எனக்கு அக்கா முறை உறவினர் ஆவார். எனது அம்மாவும் கார்த்திகாவின் அம்மாவும் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார். அவர் வீட்டிற்கு எதிரே நிறுவனம் வைத்துள்ளார். அ.சா.1 க்கு திருமணம் ஆன பிறகு கோயமுத்துாரில் உள்ள அக்கா வீட்டிற்கு இரண்டு முறை சென்றுள்ளேன். நான் போகும் போது கார்த்திகாவின் கணவரும் வீட்டில் இருந்தார். திருமணமான புதிதில் நான் சென்றுள்ளேன். அதன் பிறகும் சென்றுள்ளேன். நானும், அ.சா.1 ன் அப்பா, அம்மா மற்றும் உறவினர்களுடன் சென்றோம். திருமணமான பின்னிட்டு 25 நாட்கள் கழித்து தான் 1 ம் எதிரி மும்பைக்கு சென்றார். திருமணமான ஒரு வாரம் கழித்து நாங்கள் சென்று பார்த்தோம். திருமணமான போது குலதெய்வம் கோவிலுக்கு அவர்களுடன் நான் செல்லவில்லை. எதிரியின் குலதெய்வ கோவிலுக்கும் செல்லும் போதும் நான் செல்லவில்லை. அ.சா.1 யும் 1 ம் எதிரியையும் எங்கள் வீட்டிற்கு அழைத்து விருந்து கொடுத்தோம். திருமணமான 4 நாட்களில் விருந்து கொடுத்தோம். எங்கள் உறவினர்கள் அனைவரும் எங்கள் வீட்டின் அருகே குடியிருந்து வருகிறார்கள் . எங்களுக்கு கோயமுத்துாரில் உறவினர்கள் யாரும் இல்லை. திருப்பூரை தவிர வேறு ஊரில் உறவினர்கள் யாரும் கிடையாது. எனக்கு தாய் தந்தையர் இல்லை. நான் தனிப்பட்ட முறையில் அ.சா.1 ன் திருமணத்திற்கு சீதனம் எதுவும் கொடுக்கவில்லை. அ.சா.1 க்கு வளைகாப்பு எங்கு நடந்தது என்றால் திருப்பூல் வேணு ரெசிடன்சி ஹோட்டலில் நடந்தது. அ.சா.1 1 ம் எதிரிக்கு மின் அஞ்சல் எதுவும் அனுப்பவில்லை. போனில்தான் பேசி உள்ளார். எங்கள் வீட்டிற்கும் அ.சா.5 ன் வீட்டிற்கும் இடையே சுமார் 7 கி.மீ இருக்கும். அ.சா.5 நிறுவனத்திற்கு ஜி.எஸ்.டி மற்றும் வருமான வரி இல்லை என சொல்லி உள்ளது பொய் என்று என்னுடைய அறியாமை என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.5 னுடைய கமலம் இன்டர்நேஷனர் நிறுவனத்தின் பெயரில் ஜி.எஸ்.டி செலுத்த பதிவு எண் பெற்றுள்ளார்கள் என்றும் பெரிய நிறுவனம் போன்று ஜி.எஸ்.டி செலுத்தி வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. ஜி.எஸ்.டி செலுத்தும் அளவிற்கு பெரிய

நிறுவனம் அல்ல. எதிரிக்கும் அ.சா.1 க்கும் இடையே பிரச்சனை எதுவும் இல்லை என்றும், அ.சா.1 டம் 100 பவுன் நகை கேட்கவில்லை என்றும், 100 பவுன் நகைகள் கேட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் 100 பவுன் நகை கூடுதலாக கேட்ட விபரமும் எதிரிகள் கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ள விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நேரடியாக தெரியும். திருமணத்திற்கு முன்பாகவே 200 பவுன் நகை கேட்டார்கள். 100 பவுன் நகை போட்டோம். போலீசார் என்னை விசாரித்த போதும் எதிரிகள் 200 பவுன் நகை கேட்டதாக கூறியுள்ளேன். நான் தற்போது முதல் முதலாக நீதிமன்றத்தில் எதிரிகள் 200 பவுன் நகை கேட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை கூப்பிட்டு விசாரித்த போது நான் சொல்லியதை எழுதிக்கொள்ளவில்லை. திருப்பூர் காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள். ஆனால் வாக்குமூலம் எதுவும் எழுதி வாங்கவில்லை. கோயமுத்தூரில் உள்ள போலீஸ் விசாரித்தார்கள். எந்த போலீஸ் என்று எனக்கு சொல்ல தெரியவில்லை. போலீசார் விசாரித்த போது எதிரிகள் கூடுதலாக இன்னும் 100 பவுன் நகைகள் போட வேண்டுமென கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் முன்பாக எதிரிகள் 100 பவுன் நகைகள் கேட்டதாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். அ.சா1 திருமணத்திற்கு பிறகு கோயமுத்தூரில் பாரதி நகரில் குடியிருந்து வந்தார். கதவு எண் தெரியாது. அ.சா.1 எதிரியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று வழக்கு போட்டுள்ள விபரம் தெரியும். எதிரிகள் 100 பவுன் நகைகள் கேட்டதாகவும் எதிரிகள் அ.சா.1 ஐ கொடுமைப்படுத்தியதாகவும் நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு எதிரிகள் நகைகள் கேட்டதாக அ.சா.1 சொல்லி எனக்கு தெரியும். எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அதற்கு உடந்தையாக நானும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் திருமணத்தின் போதும் அதற்கு முன்பாகவும் அ.சா.1 க்கு 28 பவுன் நகைகள் போட்டது தெரியுமா என்றால் நகைகள் போட்டது தெரியும். என்ன அளவு என்று தெரியாது. மூன்றாவது நபர்கள் சொல்லி கொடுத்ததை வைத்து நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு யாரும் சொல்லித்தரவில்லை. நான் நேரில் பார்ததைதான் சாட்சியம் அளிக்கிறேன்.